செ.வெ.எண்: 49 நாள்: 24.01.2018

**பத்திரிகை செய்தி**

**வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க**
**மானியத்தில் காய்கறி விதைகள்: மாவட்ட ஆட்சியர் அழைப்பு!!!**

வீட்டு காய்கறி தோட்டம் அமைத்திட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில், காய்கறி சிறுதளைகளை மானியத்தில் பெற்று பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.கணேஷ், இ.ஆ.ப.,அவர்கள் அழைப்புவிடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் உள்ளமக்கள் ஊட்டச்சத்துள்ள உணவினை உட்கொள்வதை உறுதிப்படுத்திட கிராம மற்றும் புறநகர் வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு சிறப்பு முன்னோடி முயற்சியாக வீட்டுத் தோட்ட காய்கறி பாக்கெட்டுகள் வழங்கும் திட்டம் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.11.2017 அன்று துவக்கிவைக்கப்பட்டது. இதன்படி நமது புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.20/- மதிப்புடைய உயர் விளைச்சல் தரும் கத்தரி, தக்காளி, புடல், பாகல், பீர்க்கன், கீரை வகைகள், மிளகாய் மற்றும் கொத்தவரை ஆகிய காய்கறிகளில் ஏதேனும் ஐந்து காய்கறி விதைகள் அடங்கிய19,500 காய்கறி பாக்கெட்டுகள் புதுக்கோட்டை மாவட்ட புறநகர் பகுதிகள் மற்றும் கிராமப்புறங்களில் 40 சதவீத மானியவிலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு பயனாளியும் அதிகபட்சமாக ஆறு காய்கறி பாக்கெட்டுகள் வரைபெறலாம். ரூ.20/-மதிப்புடைய ஒரு காய்கறி விதை பாக்கெட்டுக்கு40 சதவீத அரசு மானியமாகரூ.8/- வழங்கப்படுகிறது. ரூ.20/- மதிப்பிலான இத்தளைகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் புறநகர்களில் உள்ளமக்கள் ரூ.12/- செலுத்தி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் இருந்து பெற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மானியவிலையில் விதைகளைப் பெற்று வீட்டுத்தோட்டம் அமைப்பதால் அனைத்து தரப்பு மக்களும் தங்களுடைய அன்றாட தேவைகளுக்கு தங்கள் வீட்டுத் தோட்டங்களிலேயே காய்கறிகளை பெற்று பயன்பெறலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**